OS: 685/2018

Date:07.09.2023

பெயர் : ராஜம்மாள்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை:**- 5, 6 பிரதிவாதிகள் தரப்பில்

1 வது அயிட்டத்தின் தொகுப்பு வீடு, 2 வது அயிட்டத்தில் உள்ள தார்சு வீடு, போர்வெல், 5 HB மோட்டார் ஆகியவற்றை குறிப்பிடாமல் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன். எனக்கு என்ன பாகம் தாவாவில் கிடைக்குதோ அதே பாகம் 5, 6 பிரதிவாதிகளுக்கும் கிடைக்க உரிமை உள்ளது என்று சொன்னால் சட்டபடி உரிமையிருந்தால் கிடைக்கட்டும். இவ்வழக்கை நான் 2013 ம் ஆண்டு தாக்கல் செய்யும்போது 5, 6 பிரதிவாதிகளை கட்சி சேர்க்காமல் 1, 2 பிரதிவாதிகளுடன் சேர்ந்துகொண்டு தாவா சொத்தில் அதிக பாகம் பெறவேண்டும் என்ற நோக்கத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரியல்ல. எனது தந்தை கந்தசாமி, 3 ம் பிரதிவாதி சம்பூரணத்திற்கு எழுதிவைத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் ரத்து செய்ய கேட்கும் பரிகாரமானது எனக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

தாவா 2 வது அயிட்ட சொத்தை பொருத்து வாதிக்கும், 1, 3, 5, 6 பிரதிவாதிகளுக்கும் சரிசமமாக பிரிக்கபட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இரண்டு அயிட்ட சொத்துக்களிலுமே எனக்கு பாகம் வேண்டும். எனது தந்தை கந்தசாமி 3 ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் செய்த விவரம் எப்போது தெரியும் என்றால் 2013 ம் ஆண்டு தெரியும். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 2011 ம் ஆண்டே வில்லங்கசான்றுகள் பார்த்தபோதே 3 ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்தது தெரியும் என குறிப்பிட்டுள்ளேன். தற்போது வருடத்தை மாற்றி 2013 என சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் முன்னுக்குபின் முரணாக குறிப்பிட்டுள்ளதால் மேற்படி விவரங்கள் ஏற்க்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரத்தை பொருத்து உண்மை விவரங்கள் எதுவும் இல்லை என்பதால் இவ்வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**:- இல்லை.

ஒப்பம்/-PW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.